மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 50-ன் கீழ் இதற்கு அனுமதி மறுக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

(ii) கச்சத் தீவு திருவிழாவிற்கு தமிழக மக்கள் செல்ல முடியாத நிலை.

திரு. கரு. சீமைச்சாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் அவையின் இன்றைய நடவடிக்கையை ஒற்றி வைத்து கீழ்க்கண்ட பொருள் பற்றி விவாதிக்க வேண்டும் :—

"இம் மாநிலத்திற்குச் சொந்தமான கச்சத் தீவில் உள்ள அந்தோணியப்பர் மாதா கோவிலில் வருகிற 13-ம் தேதி விழா நடைபெறுகிறது. ஆண்டுதோறும் தமிழகத்தைச் சேர்ந்த மக்கள் படகுகள் மூலம் இவ் விழாவிற்குச் செல்வார்கள். ஆனால் இந்த ஆண்டு அப்படிச் செல்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருப்பது பற்றி விவாதிக்க"

இந்தச் சபையின் நடவடிக்கையை ஒற்றி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

இந்த மாதம் 13-ம் தேதி திருவிழா வர இருக்கிறது. இலங்கை சர்க்கார் கெடுபிடி இருக்கும் காரணத்தால், இலங்கை சர்க்கார் ஒற்றர்கள் வந்து போகிறார்கள் என்ற பீதி ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அங்கு செல்லுகின்ற மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பது பற்றி மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துரைக்க வேண்டுமென்றும், அது பற்றி இந்தச் சபையை ஒற்றி வைத்து விவாதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒற்றி வைப்புத் தீர்மானம் கச்சத் தீவை இலங்கை அரசினர் கைப்பற்றி இருக்கிற சூழ்நிலையைப் பொருத்ததாக இருக்கிறது. இதிலே, அந்நிய நாடு ஆக்கிரமித்து இருக்கும் காரணத்தால் முடிவு கட்டும் முழுப் பொறுப்பும் இந்திய அரசைச் சார்ந்ததாக இருக்கிறது. கச்சத் தீவு தமிழகத்தோடு, இணைந்த ஒன்று என்பதும், இராமநாதபுரம் ராஜாவுக்கு உரிமையுடையதாக இருக்கிறது என்பதும் வரலாற்று முறையில் இருக்கும் குறிப்புகள் ஆகும். இதற்கு முன்னாலேயே வழக்கு ஒன்று ராமநாதபுரம் ராஜாவுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே ஏற்பட்டு ராமநாதபுரம் ராஜாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. அது சம்பந்தமான ரெக்கார்டுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு ராமநாதபுரம் ராஜாவும் அதைத் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். அதை இந்திய அரசுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அது தமிழகத்தின் பகுதிதான் என்று நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ளும். இந்திய அரசு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூட, இது பற்றித் தமிழக அரசிடமிருந்து விவரங்களைக் சேகரித்துக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதைச் சேகரித்து மத்திய அரசுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழக அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருப்பதால் உறுப்பினர் அவர்கள் இதை வற்புறுத்தவில்லை என்று கருதுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவதாகக் கூறியிருப்பதால் நான் என்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

Thiru S. BALASUBRAMANIAN : I want to raise a point o order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் சொல்லப்போவது எனக்குத் தெரியும்.

THIRU S. BALASUBRAMANIAN: I want to raise it. You can rule it out of order. Let it be recorded

3. நடைமுறைக் கேள்விகள்.

(i) அனுமதி மறுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை மீண்டும் அவைமுன் கொண்டுவருதல்.

திரு செ. பாலசுப்பிரமணியன்: கச்சத்தீவு சம்பந்தமாக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தேன். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. மறுபடியும் விதிகளுக்கு மாருக அத்தகைய ஒரு தீர்மானத்தை இந்தச் சபையின் முன் கொண்டுவரலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நண்பர் அவர்கள் கொடுத்த தீர்மானத்தையும், திரு. சீனிச்சாமி அவர்கள் கொடுத்த தீர்மானத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இப்போது கொடுத்திருப்பது அங்கு 13-ம் தேதி நடைபெறக்கூடிய விழாவைப் பற்றியது. உங்களுடைய தீர்மானத்திலே அப்படி இல்லை. தமிழகத்திற்கு உட்பட்ட பகுதி என்று கூறப்படுகிற காரணத்தால், அந்த விழாவைப் பற்றிக் கேட்டிருப்பதால் அனுமதிக்கப்பட்டது.

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(iii) மதுரையில் திரு ஈ. வே. கி. சம்பத் முதலியவர்களைத் தாக்க முயற்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மதுரையில் 4—3—68 அன்று நடைபெற்ற சம்பவங்கள் குறித்து இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி வழக்குகள் பதிவு செய்யக்கூடிய நிலைமை இருக்குமானல், அதைப்பற்றி பேசத் தேவையில்லை.

THIRU R. PONNAPPA NADAR: Rose.

MR. SPEAKER: Mr. Ponnappa Nadar is an Advocate.

THIRU R. PONNAPPA NADAR: I will not go into the merits.

MR. SPEAKER: You should not prejudice the action even though action has not been initiated. Under the Law of Contempt even though a case has not been filed, where there is a possibility of action we should not express any opinion about it.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I have given notice of the following :—

"That the proceedings of this House be adjourned to discuss about the attempt on the life and person of—

(1) Thiru E. V. K. Sampath, Ex-M.P., Member A.I.C.C.

(2) Kavingnar Thiru Kannadasan, Member, A.I.C.C.

(3) Thiru Jayakanthan, Editor, 'Jayaberigai'.

(4) Thiru Nedumaran, Editor, 'Kurinji', and

(5) Thiru Kuppusami Naidu, Congress worker on 4th March 1968 at 12-00 noon in the vicinity of the A.F.C.M's. Court at Madurai while they were returning from the same Court."

I will just explain how this may not come under ordinary admitration.